## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 69/2023</u>

நாள் 15.10.2025

PW2 –P. கோபாலன்

த/பெ – பழனிக்கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2025)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது சொந்த ஊர் கருவலூர், செங்காளிபாளையம் ஆகும். வாதி எனக்கு துாரத்து சொந்தம். வாதி மணிக்கு 3 பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த 3 பெண்களில் சத்யாவை எனது மகனுக்கு திருமணம் முடித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சத்யாவை எனது மகனுக்கு திருமணம் செய்த வகையில் தான் வாதி மணியை தெரியும் என்றால் அதற்கு முன்பாகவே எனக்கு தெரியும். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் புளியம்பட்டி – அவிநாசி செல்லும் டவுன் பஸ்ஸில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்த வகையில் வாதி அறிமுகம் ஏற்பட்டது. அதனால், வாதியிடம் அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பாக அவருடைய குடும்பம் பற்றிய விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதற்கு முன்பாக திருப்பூரில் டவுன் பஸ் ஓட்டி வந்தேன். 1990–ம் ஆண்டிலிருந்து 1999–ம் ஆண்டு வரை புளியம்பட்டி – அவிநாசி செல்லும் ரோட்டில் தான் பஸ்ஸை ஓட்டி வந்தேன். எனக்கு செங்காளிபாளையத்தில் சொத்து உள்ளது. என்னுடைய சொத்தின் சர்வே எண். மற்றும் அதன் உட்பிரிவுகள், விஸ்தீரணம் ஆகியவைகள் தெரியுமா? என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களின் சர்வே எண். மற்றும் விஸ்தீரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் எப்படி தெரியும் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்துக்களை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம், எப்படி பாத்தியம் என்ற விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால், செலம்பர கவுண்டருக்கு பாத்தியம் என்பது மட்டும் தான் தெரியும், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. அந்த செலம்பர கவுண்டருக்கு எவ்வளவு மக்கள் என்பதும், அவர்களுக்கு எங்கெங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

3. நான் எனது மகனுக்கு சத்யாவை திருமணம் முடித்த வகையில் வாதியின் வீட்டிற்கு நல்லது, கெட்டது விஷேங்களுக்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான், அதற்கு முன்பாகவும் சென்றிருந்தேன். எந்தெந்த தேதியில், எந்தெந்த விஷேங்களுக்கு சென்று கலந்து கொண்டேன் என்றால் தேதி, மாதம் எனக்கு தெரியாது. எனக்கு வாதியின் குடும்பத்தை பற்றி எனது மகனின் திருமணத்திற்கு பின்பு தான் தெரியும் என்றும், ஆனால் வாதி எனது சம்பந்தி என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு 22.01.2018–ம் தேதியில் வாதியின் மகள் சத்யாவுடன் திருமணம் நடந்தது. அதனால் அந்த திருமணத்திற்கு பின்னிட்ட காலத்திற்குரிய சம்பவங்கள் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றும், அந்த

திருமணத்திற்கு முன்னிட்ட காலத்திற்குரிய சம்பவம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.15 16:27:50 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**